(1)

நகராட்சி நிர்வாக ஆணையரகம்
18 SEP 2020
எம்.ஆர்.சி. நகர், சென்னை-28

DD (TP)

**சுருக்கம்**

நாகர்கோவில் நகராட்சி – நகராட்சிக்குட்பட்ட இடலாகுடி சந்தித் தெருவிற்கு "சதாவதானி செய்குதம்பி பாவலர் தெரு" என பெயர்மாற்ற செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் [ந.நி–V(2)] துறை**

**அரசாணை (நிலை) எண். 101** **நாள் 15.09.2020**

சார்வரி, ஆவணி– 30,
திருவள்ளுவராண்டு 2051.

**படிக்கப்பட்டது:–**

1. அரசாணை (ப) எண்.573, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 14.12.2001.
2. நகராட்சி நிர்வாக ஆணையரின் கடிதம் எண்.31066/2017/எம்1, நாள் 20.08.2018.

*******

**ஆணை:**

இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் இந்திய சுதந்திர போராட்ட வீரரும் தமிழ் பெரும் புலவருமான சதாவதானி செய்குதம்பி பாவலர் அவர்கள் தமிழுக்கு செய்த தொண்டினை போற்றும் விதமாக, நாகர்கோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.18, இடலாக்குடி சந்தித்தெருவிற்கு "சதாவதானி செய்குதம்பி பாவலர்தெரு" என சிறப்பு விலக்களித்து பெயர்மாற்றம் செய்வதற்கு ஏதுவாக நாகர்கோவில் நகராட்சி நகர்மன்ற தீர்மானம் எண்.751 நாள் 27.10.2017–ல் அங்கீகரித்து நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தின் அடிப்படையில் முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையிலிருந்து சிறப்பு விலக்களித்து, சதாவதானி செய்குதம்பி பாவலர் அவர்கள் தமிழுக்கும் தமிழ்நாட்டிற்கும் அளப்பரிய தொண்டு செய்துள்ளதால் அன்னாருக்கு பெருமை சேர்க்கும் விதமாக நாகர்கோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.18, சந்தித்தெருவிற்கு "சதாவதானி செய்குதம்பி பாவலர் தெரு" என பெயர்மாற்றம் செய்வதற்கு அரசின் அனுமதியினை வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

2. நகராட்சி நிர்வாக ஆணையரின் பரிந்துரையினை அரசு கவனமுடன் ஆய்வு செய்தது. அதனடிப்படையில், மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணைக்கு சிறப்பு விலக்களித்து, சதாவதானி செய்குதம்பி பாவலர் அவர்கள் பிறந்த வளர்ந்து வாழ்ந்த நாகர்கோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.18, கோட்டார் இடலாகுடி, சந்தி தெருவிற்கு

"சதாவதானி செய்குதம்பி பாவலர் தெரு" என சிறப்பு விலக்களித்து பெயர் மாற்றம் செய்வதற்கு, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

**// ஆளுநரின் ஆணைப்படி //**

**ஹர்மந்தர் சிங்,**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.**

**பெறுநர்:**
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை – 600 028.
மாவட்ட ஆட்சியர், கன்னியாகுமரி மாவட்டம்.
நகராட்சி ஆணையர், நாகர்கோவில் – 629 001.
**நகல்:–**
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை– 600 009.
மாண்புமிகு அமைச்சரின் (நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்ட செயலாக்கத் துறை) சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை– 600 009.
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை, சென்னை – 600 009.
அரசு கூடுதல் செயலாளரின் முதன்மை தனிச் செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை– 600 009.
இருப்புக் கோப்பு / உபரி நகல்

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

15/9/200
**பிரிவு அலுவலர்**